INSTITUTE FOR HEALTH POLICY

72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5  Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk  web: www.ihp.lk  twitter: @ihplk

# PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 22 August 2024
நேரம் : 02.00 PM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல் : info ‘at’ ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**

மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi ‘at’ ihp.lk  Twitter: @ravirannaneliya

# பொருளாதாரம் மற்றும் பணவீக்கமே இலங்கையில் மிகவும் முக்கியமான தேசிய பிரச்சினைகள் என்று இலங்கையர்கள் நம்புகின்றனர், இவற்றைத் தொடர்ந்து வேலையின்மை உள்ளது.

## *முக்கிய பிரச்சினைகள் பற்றிய கண்ணோட்டங்கள் ஏழை மற்றும் வசதியான இலங்கையருக்கு இடையில் வேறுபடுகின்றன*

ஏப்ரல் முதல் ஜூலை 2024 வரை நடத்தப்பட்ட IHP இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின் (SLOTS) சமீபத்திய கருத்துக்கணிப்பில், செப்டம்பர் மாத ஜனாதிபதி தேர்தலுக்குள் நுழையும் இலங்கையர்கள், பொருளாதாரம் மற்றும் பணவீக்கத்தை அவர்களது மிகப்பெரிய கவலையென்று பெருமளவில் குறிப்பிடுகின்றனர். எனினும் இந்த வருட ஆரம்பத்திலிருந்து வேலையின்மை பற்றிய கவலை அதிகரித்து வருகின்றது, அதேசமயம் ஊழல் மற்றும் போதைப்பொருட்களை முக்கிய தேசிய பிரச்சினைகளாக கூறும் இலங்கையர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது.




SLOTS கருத்துக்கணிப்பு நாடு எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் இரண்டினை பெயரிடுமாறு பதிலளிப்பவர்களை கேட்கின்றது. இந்த பதில்கள் சாடையாக குறிப்பிடாமல் பெறப்படுகின்றன. ஏப்ரல்-ஜுலை 2024 வரையிலான காலப்பகுதியில் 59% சதவிதத்தினர் பொருளாதாரத்தையும் (ஜன-மார். 2024 ல் இருந்து +3) மற்றும் 55% சதவிதத்தினர் பணவீக்கத்தையும் (-7 புள்ளிகள்) அவர்களது முன்னிலை கவலைகளாக குறிப்பிட்டனர். இதனை பின்தொடர்ந்து 38% வேலையின்மையையும்(+9 புள்ளிகள்), 21% அதிக வரிகளையும் (-0.5புள்ளிகள்) கூறினர். சிறிய எண்ணிக்கைகளில் இலங்கையர்கள் ஊழல் (6%), சுகாதாரம் (6%), போதைப்பொருள் (5%) மற்றும் கல்வியை (4%) அவர்களின் முன்னிலை கவலைகள் இரண்டில் கூறினர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட பதிலளிப்பவர்களில் ஒருவர்கூட ஜனாதிபதி ஆட்சிமுறை, அரசியலமைப்பு அல்லது ஜனநாயகத்தை முன்னுரிமை பிரச்சினைகளாக கூறவில்லை.

பொருளாதாரம் மிக முக்கியமான தேசிய பிரச்சினை என்ற ஒன்மித்த கருத்து பரவலாக இருந்தாலும், வசதியான மற்றும் ஏழை இலங்கையர்கள் எது முக்கியம் எனும் அவர்களின் கருத்தில் வேறுபடுகின்றனர். பணக்கார மூன்றில் உள்ள இலங்கையர்களுடன் (52%) ஒப்பிடுகையில், அதி குறைவான வசதி உடைய மூன்றில் (69%) உள்ள இலங்கையர்கள் பொருளாதாரத்திற்கு முன்னுரிமை தரவேண்டும் என்று நினைப்பதற்கு சாத்தியம் அதிகமுண்டு. இதற்கு நேர்மாறாக, வசதியானவர்களைக் (63%) காட்டிலும் ஏழை இலங்கையர்கள் (54%) பணவீக்கத்தை ஒரு முக்கிய பிரச்சனையாககக் குறிப்பிடுவதற்கான சாத்தியம் குறைவு. வேலையில்லாத் திண்டாட்டத்துடன் இன்னும் பெரிய வேறுபாடு காணப்படுகிறது, ஒன்றில்

இரண்டு நடுத்தர மற்றும் மிகவும் வசதியான இலங்கையர்களுடன் ஒப்பிடும்போது, ஏழை இலங்கையர்களில் ஐந்தில் ஒருவர்(18%) மட்டுமே இதனை முதன்மையான முன்னுரிமையாகக் குறிப்பிடுகின்றனர்.

எல்லா வயதுகளிலும் பொருளாதார பிரச்சினைகள் மற்றும் பணவீக்கம் முக்கிய கவலைகள் ஆவன. பணவீக்கத்தைப்பற்றிய மிகுந்த கவலை இளவயது (18-29 வயது) இலங்கையர்களுக்கு இருக்கும் அதேசமயம் பொருளாதார நெருக்கடி பற்றிய கவலை வயதுடன் அதிகரித்து 60 வயதுக்குக் மேற்பட்டவர்களுக்கு மத்தியில் 67% சதவிதத்தை அடைகின்றது. சனத்தில் இளவயதினரிடையே வேலை தொடர்பான கவலை பொதுவானதாக இருந்தாலும், வயது கூடும்போது இது குறைகின்றது.

### மேலும் விவரங்கள் ihp.lk விலிருந்து கிடைக்கும்

Institute for Health Policy, August 2024, "Most Sri Lankans believe the economic crisis and inflation are the country's most pressing national issues, followed by unemployment". *Available at: [https://ihp.lk/research-updates/most-sri-lankans-believe-economic-crisis-and-inflation-are-countrys-most-pressing](https://ihp.lk/research-updates/most-sri-lankans-believe-economic-crisis-and-inflation-are-countrys-most-pressing)*

### IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

### முறைமை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வயது, பாலினம், மாகாணம், துறை, சமூகபொருளாதார நிலை, இனக்குழு மற்றும் கல்வி போன்ற பண்புகள் உள்பட, தேசிய சனத்தொகையை பிரதிநிதித்துவப்படுத்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் எடையிடப்பட்டன.

**நிதியுதவி**

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.